அருட்பெரும்ஜோதி, அருட்பெரும் ஜோதி

உ
அருள்மிகு கருவூரார் கழலடிகள் போற்றி

தனிப்பெருங்கருணை, அருட்பெரும் ஜோதி



தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்

**அருள்மிகு பெருவுடையார் திருக்கோயிலில் உள்ள**

# அருள்மிகு கருவூரார்க்கு 16ஆம் ஆண்டு சித்தர் பெருவிழா

# பங்குனி உத்திர சிறப்பு பூஜை, ஜோதி வழிபாடு, அன்னதானம், அழைப்பிதழ்.

அன்புடையீர் வணக்கம்! .

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2044 விஜய வருடம் பங்குனி மாதம்30ஆம் நாள் 13.04.2014 ஞாயிற்றுக்கிழமை
தஞ்சை அரண்மனை தேவஸ்தானம், பரம்பரை அறங்காவலர் இராஜஸ்ரீ.சி. பாபாஜி ராஜாபான்ஸ்லே, பி.இ.,அவர்களின் பரிபாலனத்திற்குட்பட்டதும்,
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை தஞ்சை, உதவி ஆணையர், பொருளாளர் & மேலாளர் திரு. ச. செந்தில்குமார், பி.காம்.,
செயல் அலுவலர். திரு.தா.அரவிந்தன். கண்காணிப்பாளர் திரு. ந. அசோகன், அவர்களது கண்காணிப்பில் உள்ள அருள்மிகு பெருவுடையார் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள
அருள்மிகு கருவூரார் சன்னதியில், சித்தர் பெருவிழ,ா நிகழ்ச்சி நிரலில் கண்டவாறு நிகழ்வுறும். தானத்தில் சிறந்தது அன்னதானம், பூசையில் சிறந்தது
மகேஷ்வரபூசை. அன்றைய தினத்தில் வழங்கப்படும் அன்னம், சித்தர்களின் அருமருந்தாகும், மெய்யன்பர்கள் தங்கள் குடும்பசகிதமாய்
வருகை தந்து விழாவில் பங்கேற்று விழாவினைச் சிறப்பித்து, அருள்மிகு சித்தர் கருவூராரின் பேரருளைப் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

**12.04.2014 சனிக்கிழமை மாலை 6.00 மணி**

**இடம் : கருவூரார் சன்னதி**

**வரவேற்புரை :** திரு.ஆர். சுரேஷ் பி.ஏ., பி.எட்., தஞ்சை.

**சொற்பொழிவு :** ஸ்ரீ முருகப்பெருமானின் திருப்புகழ் பெருமையினை இசையுடன்
வழங்குபவர் திருமுருக அருணகிரியாரின் அருள்பெற்ற
திருவாளர் **வீ.ராஜாங்க வாண்டையார்** காவல்துறை (ஓய்வு) அவர்கள்

**நன்றியுரை :** திரு.சிவ.முத்துக்குமரசாமி ஆசிரியர் - (ஓய்வு) - தஞ்சாவூர்.

**13.04.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி**

திரு. Er. **G.சுப்பிரமணியன்** - தலைவர், அருட்பெருஞ்ஜோதி அறக்கட்டளை.
திரு. **ப.தம்பையா** (அருட்பெருஞ்ஜோதி அறக்கட்டளை - நிறுவுநர்)
கக்கரைக்கோட்டை திருமிகு. **இராமலிங்கம் சுவாமிகள்,**
நெல்லுப்பட்டு தவத்திரு. **நமச்சிவாய சுவாமிகள்,**
பழஅடிகளார். சிவத்திரு. **கு. சண்முகம் சுவாமிகள்,**
அருட்செல்வர், அருள்நிதியர் ஜோதிட சிரோன்மணி ஜோதிட மாமணி
திரு. **சுவாமி சுப்பிரமணியம்,** M.Sc., Ph.D., சென்னை.
திரு. **ம.கோவிந்தராஜன்,** நிறுவனர், அருட்ஜோதி மணிமன்றம்.தஞ்சை.
கவிஞர். **தியாக ஜோதிராமலிங்கம்,** வள்ளலார் அறப்பணி மாமன்றம்.தஞ்சை.
இவர்களது தலைமையில் ' **அகவல் பாராயணம்** ' நடைபெறும்.

தேவார இசைமாமணி திருவாடுதுறை ஆதீன சித்தாந்த ரத்தினம் டாக்டர் **ச. திருநாவுக்கரசு** (தலைவர் சைவ சித்தாந்த பெருமன்றம்-தஞ்சை) மற்றும்
**அப்பர் தமிழ் மன்ற சிவக்கொழுந்துகள்** ஆகியோரின், தேவாரத்திருமுறை இன்னிசைப்பா நடைபெறும்.

காலை 8மணிக்கு : அருள்மிகு பெருவுடையார், பெரிய நாயகி, வராகி அம்மனுக்கு ஆராதனை.
காலை 8.15 மணிக்கு : அருள்மிகு லோக நாயகிக்கு அபிஷேகம், ஆராதனை.
காலை 10 மணிக்கு : அருள்மிகு கருவூரார்க்கு சிறப்பு அபிஷேக ஆராதனை, ஜோதி வழிபாடு
காலை 10.15 மணிக்கு : பெரியகோவிலுக்கு அருகில் உள்ள பெத்தண்ணன் கலைஅரங்கில்

## மகேஸ்வர பூஜை மற்றும் சிறப்பு அன்னதானம்

சிறப்பு அன்னதானம் துவக்கி வைப்பவர் **விவேகானந்தர் கயல்விழி குடும்பத்தினர்.** சென்னை.

மாலை 4.30 - 5.30 மணிவரை : அருள் மிகு **கருவூரார்க்கு சந்தனக்காப்பு அலங்காரமும், ஜோதிவழிபாடும்**

**வரவேற்புரை :** திரு.**ஆழி. இராம அரங்கராஜன்** தமிழாசிரியர் ஆசிரியர் (ஓய்வு) தஞ்சை.

**வாழ்த்துரை :** **டாக்டர். மகாலெட்சுமி** - சந்திரசேகர் அறக்கட்டளை தமிழ்கலை பண்பாட்டு ஆய்வு மையம்.
பழனி சன்மார்க்க சாது **இராஜலிங்கம்** அவர்கள்.

**கலைநிகழ்ச்சி :** **வில்லுப்பாட்டு** - முனைவர் பாண்டு ரெங்கன் , முனைவர் கருணாகரன்,மற்றும் வடலூர் இளைஞரணி குழுவினர்.

**நன்றியுரை :** **கவிஞர். தியாக ஜோதி இராமலிங்கம்,** வள்ளலார் அறப்பணி மாமன்றம், தஞ்சை.

**விடையாற்றி :** 14.04.2014. திங்கட்கிழமை காலை 10.00 மணி.

**நிரந்தரத்தலைவர் :** அருள்மிகு **சித்தர் கருவூரார்** அவர்கள்

அன்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், தெற்குவீதி, தஞ்சை.

திருச்சிற்றம்பலம்

# அன்னதான தேவ ரகசியம்

## பசி தவிர்த்தலாகிய ஜீவகாருண்ய ஒழுக்கமும் அதன் புண்ணிய பேறுகளும்

1. கடவுள் அருளைப் பெறுவதற்கு ஜீவகாருண்யமே வழியாதலால், ஞானவழியென்பதும், சன்மார்க்கமென்பதும், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்றும் , அஞ்ஞான வழி யென்பதும் துன்மார்க்கம் என்பதும், ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமை யென்றும் அறியப்படும். ஜீவகாருண்யம் விளங்கும் போது அறிவும் அன்பும் உடனாக நின்று விளங்கும், அதனால் உபகாரசக்தி விளங்கும், அந்த உபகார சக்தியால் எல்லா நன்மைகளுந் தோன்றும் ஜீவகாருண்யம் மறையும் போது, அறிவும், அன்பும் உடனாக மறையும். அதனால் உபகார சக்தி மறையும், உபகாரசக்தி மறையவே எல்லாத் தீமைகளும் தோன்றும்.

2. பசி என்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்ற போது, ஆகாரத்தால் அவிக்கின்றது தான் ஜீவகாருண்யம். பசியென்கிற விஷக் காற்றானது, ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில், ஆகாரம் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே ஜீவகாருண்யம். ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியனவைகளைச் செய்கின்றவர்கள் கடவுள் அருளுக்குச் சிறிதும் தகுதியுடையவர்கள் அல்லர். அவர்களை ஆன்ம விளக்கமுள்ளவர்களாகவும் நினைக்கப்படாது, ஜீவகாருண்யம்மில்லாது செய்யப்படுகிற செயற்கை எல்லாம் பிரயோஜனமில்லாத மாயாஜாலச் செய்கைகளே ஆகுமென்று அறிய வேண்டும்.

3. சூலை, குன்மம், குஷ்டம் முதலிய தீராத வியாதிகளால் வருந்துகின்ற சம்சாரிகள் தங்கள் தகுதிக்கு ஏற்றபடி பசித்தவர்களுக்கு பசியாற்றுவிப்பதே விரதமாக அனுசரித்தார்களானால், அந்த ஜீவகாருண்ய அனுசரிப்பே நல்ல மருந்தாக அந்த வியாதிகளை நிவர்த்தி செய்து, விசேஷ சௌக்கியத்தை உண்டு பண்ணுமென்பது உண்மை.

4. பலநாள் சந்ததி யில்லாமல் பல பல விரதங்களைச் செய்து வருகின்ற இல்லறத்தார்கள், தங்கள் வசதிக்குத்தக்கபடி பசித்த ஏழைகளது, பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால், அந்த ஜீவகாருண்ய அனுசரிப்பு நல்ல அறிவுள்ள சந்ததியை உண்டு பண்ணும் என்பது உண்மை.

5. அற்பவயதென்று குறிப்பினால் அறிந்து கொண்டு இறந்து போவதற்கு அஞ்சி விசாரப்படுகின்ற இல்லறத்தார்கள், தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளுக்கும் பசியை ஆற்றுவிப்பதே, விரதமாக அனுசரிப்பார்களானால், அந்த ஜீவகாருண்ய அனுசரிப்பு தீர்க்காயுளை உண்டுபண்ணுமென்பது உண்மை.

6. கல்வி, அறிவு, செல்வம், யோகம், முதலியவைகளைக் குறித்து வருந்துகின்ற சம்சாரிகள் தங்கள் தரத்திற்குத் தக்கபடி, பசித்த ஏழைகளுக்குப் பசியாற்றுவிப்பதே, விரதமாக அனுசரிப்பார்களானால், அந்த ஜீவகாருண்ய அனுசரிப்பு, கல்வி அறிவு, செல்வம், போகம் முதலானவைகளை உண்டுபண்ணுமென்பது உண்மை.

7. ஜீவகாருண்யமுள்ள சம்சாரிகளது விளை நிலத்தில், பிரயாசை இல்லாமலே விளைவு மேன்மேலும் உண்டாகும் வியாபாரத்தில் தடையில்லாமல் லாபங்களும், உத்தியயோகத்தில் கெடுதியில்லாத மேன்மையும் உண்டாகும். சுற்றங்களாலும், அடிமைகளாலும் சூழப்படுவார்கள். துஷ்டமிருகங்களாலும், துஷ்ட ஜெந்துக்களாலும், துஷ்ட பிசாசுகாளாலும், துஷ்ட தெய்வங்களாலும் பயஞ்செய்யப்படார்கள், விடுசிகை, விஷக்காற்று, விஷச்சுரம், முதலிய அஜாக்கிரதை பிணிகளுமுண்டாகாது. அந்த ஜீவகாருண்யமுள்ள சம்சாரிகள் ஆற்றுவெள்ளத்தாலும், கள்வர்களாலும், விரோதிகளாலும் கலக்கப்படமாட்டார்கள் அரசர்களாலும் தெய்வங்களாலும் அவமதிக்கப்படமாட்டார்கள்.

8. புண்ணிய பூமிகளை வலஞ்செய்தல், புண்ணிய தீர்த்தங்களிலாடல் புண்ணியதலங்களில் வசித்தல், புண்ணிய மூர்த்திகளை தரிசித்தல், தோத்திரஞ்செய்தல், ஜெபம் செய்தல், விரதஞ்செய்தல், யாகஞ்செய்தல், பூஜை செய்தல், இவைகளை எல்லாம் செய்த பெரும் புண்ணிய பலன்களை யெல்லாம், இருந்த இடத்தில் இருந்தே பசித்தவர்களுக்கு பசியாற்றுவிப்பதே விரதமாகவும், கடவுள் வழிபாடாகவும், கொண்ட சம்சாரிகளெல்லாம், கடவுளைக் கண்டவர்களென்றும், கடவுளின்பத்தை அனுபவிக்கின்ற முத்தரென்றும் அறிய வேண்டும். பசி நீங்க உண்டு சந்தோஷித்தவர்கள், உண்ண உணவு கொடுத்த புண்ணியர்களைத் தெய்வமாகப் பாவிக்கின்றார்களாதலால், இவர்களே தெய்வமென்று சத்தியமாக அறிய வேண்டும். தேவர், முனிவர், சித்தர், யோகர், முதலியவராலும் வணங்கத்தக்க சிறப்புடையவர் ஆவார்களென்று, சர்வசக்தியுடைய கடவுள் சாட்சியாக சத்தியஞ் செய்யப்படுமென்று அறியவேண்டும்.

திருச்சிற்றம்பலம்

(வள்ளல் இராமலிங்க அடிகளார்)

**அன்னதானம் செய்து அருள்பெறும் பயனைப் பெற்றுய்ய நிதி தருவீர்! நீடுவாழ்வீர் !.**

இறைபணியில் :

சிவ. பாலசுப்பிரமணியன்,பிலிட்., எம் எட்,. நல்லாசிரியர் ,தஞ்சை,
ஆர்.ராமசந்திரன். சரபோஜி கல்லூரி.(ஓய்வு).தஞ்சை.
கே. சந்திர சேகரன் திவ்யா கைவினைப்பொருள் தயாரிப்பாளர் தஞ்சை
ஆர் . சந்திரசேகரன் ஐயம்பெருமாள் டிரேடர்ஸ் தஞ்சை
ஏ.எஸ். உதயன் - தமிழ்நாடு ரியல் எஸ்டேட்,தஞ்சை
என். சொக்கலிங்கம், தக்காளி வியாபாரம். காராஜ் மார்கெட்,தஞ்சை
ஆர். தம்பா. சன் புரமோட்டார்ஸ்,தஞ்சை, முனிசிபல் காலனி.
கே.வெங்கடேசன் - A to Z ரியல் எஸ்டேட் ரெட்டிபாளயம் ரோடு.
ச.ராஜமகேஸ்வரன் - ஆடிட்டர், கணபதி நகர், தஞ்சை.
எஸ். பழனி, செந்தில் திருமன மண்டபம்.
அழகர்சாமி, குருஜகஜோதி சைக்கிள் கம்பெனி, தஞ்சாவூர்.
எஸ். செல்வராஜ் சுவாமிகள், சக்தி உபாசகர், தஞ்சாவூர்,
வீ.தர்மலிங்கம் - கரைமீண்டார் பால்பண்னை,தஞ்சை.
எஸ்.வி. பச்சை முத்து, பி.எஸ்.குமார் சால்டிரிங், தஞ்சை.
பாலமுரளி & பிரதர்ஸ், சீனிவாசா எலக்ட்ராணிக்ஸ்,தஞ்சை.
எஸ். கல்யாணசுந்தரம், ரெத்னா ஆயில் ஸ்டோர்,தஞ்சை.
ஆர். முரளிதரன், பி.ஏ. சி.பிஎட், மணி நகர்,தஞ்சை.

சிவதிரு. எஸ். குணசீலன், பி.காம்,.
புண்ணியமூர்த்தி பிள்ளை டிபார்ட்மெணட் ஸ்டோர்.தஞ்சை.
எஸ். சத்திய சீலன், ஆசிரியர்- (ஓய்வு) கரந்தை.
பா. செல்வராஜ், வணிகஅலுவலர் - (ஓய்வு) மேலவீதி, தஞ்சை.
எஸ்.கலியராஜ், லெட்சுமி விலாஸ் வங்கி, ஓய்வு, தஞ்சை
சுசிராஜன், பேன்சி ஸ்டோர் - பெரியகோவல் கார்பார்கிங்
சக்தி, கோசி மணி நகர், கும்பகோணம்.
யுவராஜ் - புதுபெருங்கலத்தூர் - சென்னை
வெங்கடேசன், வக்கில் குமாஸ்தா, மேலவீதி தஞ்சாவூர்.
யு. செல்வக்குழந்தை - உதவி பேராசிரியர்,
மணியம்மை பல்கலைக்கழகம்.தஞ்சை.
என். மணி தலைமை ஆசிரியர் ( ஓய்வு )
டாக்டர். உஷா கேசவகண்ணன். பிரபா நகர், தஞ்சை.
டி.எஸ். துரைராஜ், குதிரைகட்டித்தெரு, தஞ்சை.
எஸ். சந்திரன், டீ. கடை, திரு நகர், தஞ்சை.
கே. பாபு , எல்.ஐ.சி. முகவர், தஞ்சை.
எஸ். வாசு தேவன், காய்கரி கடை ரெட்டிபாளையம் ரோடு,
பி. வீரையன் மங்கொண்டார், கருவேப்பிளை வியாபாரம்.

---

**கனரா வங்கி, சீனிவாசபுரம் கிளை, தஞ்சாவூர், கணக்கு எண் : 8543101003826**

---

**அருள்மிகு கருவூரார் சன்மார்க்க சங்க அறக்கட்டளை,** பதிவு எண் : 259/11
அருட்பெரும் ஜோதி இல்லம், சங்கராபுரம் 679, சிங்கப்பெருமாள் குளம் தென்கரை 3ஆம் தெரு,
திருநகர், தஞ்சாவூர் - 613 009. போன் : 9486309952
SWAMY SUBRAMANIYAM, M.Sc., Ph.D.,
VALLALAR PUBLIC CHARITABLE TRUST, CHENNAI. CHENNAI , Ph : 93821 66019, 90422 25854